தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்.
பிறப்பிப்பவர்: திரு.அ.ஜஸ்டின்., பி.எஸ்சி (விவ).

செ.மு.ஆ.எண்.ஆ2/4866/2016 நாள்:11.07.2022

| | | |
|---|---|---|
| பொருள்: | | பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி – திரு.S.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டது - தொடர்பாக. |
| பார்வை: | 1. | அரசாணை (3டி) எண்.44, வேளாண்மை உழவர் நலத் (வேநி-9) துறை, நாள்: 06.05.2022. |
| | 2. | சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். அநிபி8/72024/2021, நாள்: 28.06.2022. |

-----

ஆணை:-

1.பார்வை (1)-ல் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) ஆக பணி நியமனம் செய்யப்பட்டு 03.03.2021 முற்பகல் பணியில் சேர்ந்த திரு.S.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் (பிணையம்) என்பவரது பணியினை 03.03.2021 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. இதனைத் தொடர்ந்து இவரை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

3. மேலும் இப்பணியாளர் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்த பின்னர், அரசின் விதித்தளர்வு ஆணை பெற்று தகுதிகாண் பருவம் முடித்து வைக்கப்படும் என்றும், தகுதிகாண் பருவம் முடித்த பின்னரே இவருக்கு இரண்டு மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: பார்வை 1-ல் கண்ட அரசாணை. வேளாண்மை இணை இயக்குநர்,
தஞ்சாவூர்.

பெறுநர்

திரு.S.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் (பிணையம்),
வேளாண்மை விரிவாக்க மையம், தாமரங்கோட்டை.

வழி மற்றும் நகல்: வேளாண்மை உதவி இயக்குநர்- பட்டுக்கோட்டை.
நகல்: “அ2” பிரிவு பணிப்பதிவேட்டில் பதியும் பொருட்டு
நகல்: இருப்புக்கோப்பு

## சுருக்கம்

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு எஸ்.கார்த்திகேயன் என்பவரின் பணியினை 03.03.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை

அரசாணை (3டி) எண்.44 நாள்:06.05.2022

சுபகிருது வருடம்
சித்திரை திங்கள் 23,
திருவள்ளுவர் ஆண்டு 2053

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண் அநிபி8 / 72024 / 2021, நாள் 18.03.2022.

*****

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டில் பேராவூரணி வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் திருச்சிற்றம்பலம் வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடங்கு காவலராகப் பணிபுரிந்து வந்தபோது 17.06.2013 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த (லேட்) சி.சுப்பிரமணியன் அவர்களின் குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக வட்டாட்சியர் வழங்கிய சான்றின் அடிப்படையில் அவரது வாரிசு / மகன் திரு எஸ்.கார்த்திகேயன் என்பவரின் கல்வி மற்றும் வயது தொடர்புடைய சான்றுகள் மற்றும் இதர ஆவணங்களை பரிசீலித்து ஆணையிடப்பட்ட வேளாண்மை இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அநிபி6 / 97513 / 2019, நாள் 12.02.2021-ன்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்து, தனியருக்கு உரிய பணியிட ஆணை வழங்கும் பொருட்டு தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதென்றும், அவ்வாறே, தஞ்சாவூர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2 / 1846 / 2021, நாள் 22.02.2021-ன்படி, தனியர், தஞ்சாவூர், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிலுள்ள பட்டுக்கோட்டை, வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தின் கீழ் தாமரங்கோட்டை, வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளராகப் (பிணையம்) 03.03.2021 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளதோடு, தனியரின் பணியினை 03.03.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டு, கருணை அடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் (பிணையம்) பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு எஸ்.கார்த்திகேயன் என்பவரின் பணியினை 03.03.2021 முற்பகல் முதல், அப்பணிக்குத் தேவையான உடற்தகுதியினை தனியர் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியானது, முன்தேதியிட்டு வரன்முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ. சா. எண் 6617 / க்யூ.1 / 2022-1, நாள் 20.04.2022 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ. சா. எண் 2307955 / ஜி1 / 2022, நாள் 02.05.2022--இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை-5 (இணைப்புடன்).
திரு.எஸ்.கார்த்திகேயன், இளநிலை உதவியாளர் (பிணையம்)
வழி: வேளாண்மை இயக்குநர், சென்னை-5.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.
முதன்மை கணக்காய்வுத் தலைவர், சென்னை-18.
கணக்காய்வுத் தலைவர் (தணிக்கை-1), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை-18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை-18.
இருப்பிட தணிக்கை அலுவலர், முதன்மைக் கணக்காய்வுத் தலைவர் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் (ஜி1) துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண் 6983 / வேநி9 / 2022
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
21/6/22